22nd September 1956]

Sri P. RAMAMURTHI : தண்ணீர் எடுத்துக்கொள்ளாமல் இருந்தாலும் தண்ணீர் வரி விதிக்கிறார்கள் என்றும் சொல்லுகிறார்கள். சோம்பேரிகள் தண்ணீர் கொடுத்தாலும் எடுத்துக்கொள்ள மாட்டார்கள் என்றும் சொன்னார். ஆனால் சர்க்காரே தண்ணீர் கொடுக்காமல் இருந்தால் இதில் யார் சோம்பேரிகள் என்பதை அறிய விரும்புகிறேன். இதற்கும் சர்க்கார் பதில் சொல்லவேண்டும்.

The Hon. Sri M. A. MANICKAVELU : இதைப்பற்றி தனி கேள்வி கேட்டால் பதில் சொல்லுகிறேன்.

* 174 *Q.*—Sri K. T. RAJU (on behalf of Sri N. K. Palanisamy) : Will the Hon. the Minister for Revenue be pleased to state— 9–50 a.m.

(*a*) whether this Government have constituted any committee during 1956 to enquire into the grievances of the Lower Bhavani ayacutdars of Coimbatore district;

(*b*) whether the Committee has made any recommendations to the Government; and

(*c*) if so, the details of the recommendations?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) No, Sir.

(*b*) & (*c*) Do not arise.

Sri K. R. NALLASIVAM : 1956-ம் வருஷம் சத்தியமங்கலத்தில் நடந்த மகாநாட்டுக்கு கனம் மாணிக்கவேலு அவர்கள் வந்திருந்தார்கள். அந்த மகாநாட்டில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. அதைப் பெரும்பாலும் சர்க்கார் அமைத்த கமிட்டியாகவே எண்ணினார்கள். அதற்குப் பின்னால் ஸ்ரீ ரங்கசாமி அங்கே சுற்றுப்பிரயாணம் செய்தார். ஸ்ரீ கக்கன் சுற்றுப் பிரயாணம் செய்தார். நிதி அமைச்சர் அவர்களும், முதல் அமைச்சர் அவர்களும் சீக்கிரமே ஒரு மகாநாட்டை மறுபடியும் கூட்டி உடனடியாகச் சில உத்திரவுகளைப் பிறப்பிப்பதாகச் சொன்னார்கள். அவைகள் எல்லாம் எந்த நிலைமையில் இருக்கின்றன என்று கனம் மந்திரி அவர்கள் சொல்வாரா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் ஸ்ரீ நல்லசிவம்கூட இவ்விஷயத்தில் அனேக மனுக்களை அனுப்பியும், இருக்கிறார்கள். அடிக்கடி கிளர்ச்சியும் செய்துவருகிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியும். அவ்விஷயம் விசாரணையில் இருந்துவருகிறது. கூடிய சீக்கிரம் சர்க்கார் ஒரு முடிவுக்கு வரும்.

Sri P. G. MANICKAM : லோயர் பவானி பிரதேசத்தில் 1,464 ஹரிஜனங்கள் தங்கள் வீடுகளை இழந்திருக்கிறார்கள். இதுவரையில் அவர்களுக்கு 600 வீடுகள் தான் கட்டித்தரப்பட்டிருக்கிறது. இன்னும் 800 வீடுகள் கட்டப்படவேண்டியிருக்கின்றன. வீடுகள் கட்டிக்கொடுப்பதற்காக ஒதுக்கப்பட்ட எண்பதாயிரம் ரூபாய் சர்க்கார் வசம் இருக்கிறது. லோயர் பவானி வேலை முடிவு அடையும் தருவாயில் இருப்பதால் உடனடியாக இந்தப் பணமும் லாப்ஸ் ஆகாமல் வீடு இழந்த மற்ற ஹரிஜனங்களுக்கு எல்லாம் வீடுகளைத் துரிதமாகக் கட்டிக்கொடுக்க கனம் மந்திரி அவர்கள் முயற்சி எடுப்பார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : வீட்டு விஷயம் தனி. கனம் அங்கத்தினர் இதைப்பற்றி பிரத்யேகமாகக் கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.